பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 27 சனிக்கிழமை 13.08.2022 கதிர் 169

## தமிழ் மக்களின் மனதை வெல்லவேண்டும் ரணில்

### கூட்டமைப்பு கோரிக்கை

தமிழ் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். ☞2

# புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியது இலங்கை அரசு

### ரணில் அதிரடி நடவடிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு, சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர் அமைப்புக்கள் மீதான தடையை அதிரடியாக நீக்கியுள்ளது.

அதற்கமைய உலகத் தமிழர் பேரவை மற்றும் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது. ☞2



## சர்வகட்சி அரசில் தமிழ், முஸ்லிம்களுக்கு பிரதமர், சபாநாயகர் பதவிகளை வழங்குக

### டிலான் பெரேரா எம்.பி. வலியுறுத்து



சர்வகட்சி அரசில் அமைச்சரவையை வரையறுத்து பிரதமர், சபாநாயகர் உள்ளிட்ட பிரதான பதவிகளைத் தமிழ், முஸ்லிம்கள் இடையே பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும், இதன் மூலம் இலங்கை தொடர்பில் சர்வதேசத்துக்குச் சிறந்த செய்தியை கொண்டு செல்ல முடியும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் டலஸ் அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ☞2

## தாய்லாந்தில் இறுக்கமான பாதுகாப்புடன் கோட்டாபய



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாய்லாந்தில் தங்கியுள்ள நிலையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது எனச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய தாய்லாந்தில் ஹோட்டல் ஒன்றில் தற்காலிகமாகத் தங்கியுள்ள நிலையில் பாதுகாப்புக் கருதி குறித்த ஹோட்டலின் பெயர் வெளியிடப்படவில்லை ☞2

## நாடு திரும்பிய நால்வர் மீண்டும் தமிழகத்துக்கு

(ந.லோகதயாளன்)



இலங்கையிலிருந்து மேலும் 4 பேர் அகதிகளாகத் தமிழகம் சென்றுள்ளனர்.

குறித்த நால்வரும், தலைமன்னாரில் இருந்து இன்று அதிகாலை படகு மூலமாக இராமேஸ்வரத்தைச் ☞2

### மின் துண்டிப்பு நேரத்தில்

## இளைஞர் மீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மனோகரா சந்திக்கு அருகாமையில் இளைஞர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ☞2

## விரைவில் இலங்கை திரும்புவார் கோட்டா

### அடித்துக் கூறுகின்றது 'மொட்டு'



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

'இலங்கையில் இருந்து மாலைதீவு சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, அங்கிருந்து சிங்கப்பூர் சென்றார். தற்போது தாய்லாந்து சென்றுள்ளார். ☞2

## பொது மன்னிப்பு ஆவணத்தில் ரஞ்சன் கையொப்பம்

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தொடர்பான ஆவணங்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க இன்று கையொப்பமிட்டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பு வழங்க பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## அடுத்த வாரம் 5 நாள்களும் பாடசாலை

அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற சகல பாடசாலைகளின் செயற்பாடுகளை அடுத்த வாரம் 5 நாள்களும் நடத்துவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையான 5 நாள்களில் வழமையான அடிப்படையில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை பாடசாலை செயற்பாடுகள் ☞2

## நாடாளுமன்றத்தின் நேர அட்டவணையில் திடீரென மாற்றம்



நாடாளுமன்றத்தை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பிக்கவும், மதிய உணவு இடைவேளையை பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை அரை மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்துவதற்கும் ☞2

## 121 உறவுகளையும் அரசே சாகடித்தது!

### கூட்டமைப்பு குற்றச்சாட்டு



காணாமல்போன தமது உறவுகளைத் தேடித் போராடிய உறவுகளில் 121 பேர் இதுவரையில் மரணித்துள்ளனர். இது சாதாரண மரணமல்ல. இதுவும் அரசின் ஒரு படுகொலைதான். ☞2

## ஆஸி. செல்ல முயற்சித்த 701 பேர் இதுவரை கைது



இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் செல்ல முயற்சித்த 701 பேர் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஆஸ்திரேலியா செல்வதற்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்ட 210 பேர், நாட்டின் சில பாகங்களில் ☞2

## நாடாளுமன்றத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று இன்று ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய நாடாளுமன்றம் எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் கூட விருப்பதுடன், எதிர்க்கட்சி கொண்டுவரும் மின்சாரக் கட்டண அதிகரிப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை அன்று மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த வாரம் 5 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு இடையிலான கலந்துரையாடல் இன்று நடைபெற்றது.

இதன்போது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 121 உறவுகளையும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏனெனில் உறவுகளை வீதிகளில் இறங்கிப் போராட வைத்து இந்த அரசு கொன்றுள்ளது. இதற்கு அரசு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

காணாமல்போன தமது உறவுகளுக்காக 2000 நாள்களைக் கடந்து அவர்களின் உறவுகள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

நாம் சபையில் பதாகைகளுடன் எழுந்தவுடன் ஒளிப்பதிவு நிறுத்தப்படுகின்றது. நாங்கள் பதாகைகளைப் பிடித்தால் திட்டமிட்டு நீங்கள் உடனடியாக இது புலிகளுக்கான அஞ்சலி எனப் பிரசாரம் செய்கின்றீர்கள். சிறுபான்மையினர் ஒதுக்கப்படுவது மட்டுமன்றி அவர்களின் பிரதிநிதிகள் கூட நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்படுகின்றனர். அவர்கள் தமது பேச்சுச் சுதந்திரத்திலிருந்து - கருத்து சுதந்திரத்திலிருந்து மறுக்கப்படுகின்றார்கள்; தடுக்கப்படுகின்றார்கள். இதற்கும் எமக்கு நீதி வேண்டும்.

தமது காணாமல்போன உறவுகளுக்காக 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அந்த மக்கள் வீதிகளில் தொடங்கிய போராட்டமானது 2,000 நாள்களைக் கடந்து 121 பெற்றோர்களை - உறவுகளை இழந்து முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் இந்தச் சபையில் முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

உயிரிழந்த 121 பேரும் போராட்டக் களத்தில் இருந்தவர்கள். அவர்கள் நோய் வாய்ப்பட்டு மரணித்துள்ளனர். இந்த மரணங்களைச் சாதாரணமாக விட்டு விட முடியாது. இந்த மரணங்களும் இந்த அரசினுடைய படுகொலைப் பட்டியலில் வரவேண்டிய விடயம். 121 உறவுகளும் மரணிக்கவில்லை. கொல்லப்பட்டார்கள். அவர்களை வீதிகளில் இறங்கிப் போராட வைத்து இந்த அரசு கொன்றுள்ளது. இதற்கு அரசு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் - என்றார்.

## ஆஸி. செல்ல .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டவிரோதமாக இந்தியா செல்ல முற்பட்ட 113 பேர் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## விரைவில் இலங்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதற்காக இவ்வாறு சுற்றித் திரிகின்றார். அவருக்கு இலங்கை வருவதற்கு உகந்த சூழ்நிலை இல்லையா?" என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவ்வாறு எந்தத் தடையும் இல்லை. அவர் விரும்பிய நேரத்தில் நாடு திரும்பலாம். அவருக்கென சில பணிகள் இருக்கலாம். அந்தப் பணிகள் முடிவடைந்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிச்சயம் நாடு திரும்புவார். இலங்கைதான் அவரின் நாடு - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த மேலும் குறிப்பிட்டார்.

## நாடு திரும்பிய நால்வர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்றடைந்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 50 வயதுடைய தாய், 22 மற்றும் 26 வயதுடைய இரு மகன்கள் மற்றும் 19 வயதுடைய மகள் ஆகியோரே இவ்வாறு சென்றுள்ளனர்.

மண்டபம் கரையோரப் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் குறித்த நால்வரும் 2006ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை மண்டபம் முகாமில் தங்கிருந்து மீண்டும் இலங்கைக்குச் சென்றனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய, மாநில புலனாய்வு அதிகாரிகளின் விசாரணைக்கு பின்னர் 4 பேரும் மண்டபம் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## இளைஞர் மீது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் நேற்றிரவு மின் துண்டிப்பு நேரத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ். நகரப் பகுதியிலுள்ள தொலைபேசி விற்பனையகத்தில் பணிபுரியும் தொல்புரம் மேற்கைச் சேர்ந்த மாயராசா லக்சாந்தன் என்ற இளைஞரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகாமையில் உள்ள ஆலயத்தில் இருவர் வழிபட்டனர். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் திடீரென வந்த இருவர், ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த இளைஞர் மீது தாக்குதல் நடத்த முயன்றனர். உடனே அவர் ஐந்து சந்திப் பகுதியை நோக்கி தப்பியோட முயன்றுள்ளார். இருப்பினும் அவர்கள் கலைத்து கலைத்து வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதில் இளைஞரின் கையில் படுகாயம் ஏற்பட்டுள்ளது.

அதன் பின்னர் அங்கு வந்த பொதுமக்கள், படுகாயமடைந்த இளைஞரை பட்டா வாகனத்தில் ஏற்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சர்வகட்சி அரசில் தமிழ், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொள்கை விளக்க உரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது டிலான் பெரேரா எம்.பி. மேலும் கூறுகையில்,

நான் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவுக்கே ஆதரவளித்தேன். அதற்குக் காரணம் சர்வகட்சி அரசை அமைக்க வேண்டும் என்று பலரும் விடுத்த கோரிக்கையே ஆகும். சஜித் பிரேமதாஸவே அவரின் பெயரைப் பரிந்துரைத்திருந்தார். அதற்கு முதல்நாள் வரையில் டலஸ் அழகப்பெருமவுக்கே பெரும்பான்மையானவர்கள் ஆதரவளிக்கத் தீர்மானித்திருந்தனர். 90 வீதமானவர்கள் அந்தத் தீர்மானித்திலேயே இருந்தனர். இதன்படியே நான் வாக்களித்தேன்.

இதற்கு முன்னர் ஜனாதிபதிகள் பலரின் சிம்மாசன உரைகளைக் கேட்டுள்ளோம். அவர்கள் சட்டபூர்வமாகத் தெரிவாகிய ஜனாதிபதிகளாகும். ஆனால், அண்மையில் வேறு முறையில் அரசமைப்பு ரீதியில் வந்தார் எனக் கூறப்படும் ஜனாதிபதியின் உரையைக் கேட்டோம். அவர் சர்வகட்சி அரசு தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சர்வதேசத்துக்குச் சிறந்த செய்தியொன்றைக் கூற முடியும். சர்வகட்சி அரசில் அமைச்சரவையை வரையறுத்து பிரதான பதவிகளை மற்றைய இனத்தவர்களிடையே பகிர்ந்து கொள்ளலாம். சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் தமிழர் ஒருவரைப் பிரதமராக்கலாம். ஏன் இங்கு இவ்வாறு முடியாது? அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த பராக் ஒபாமாவுக்கு ஜனாதிபதியாக முடியுமென்றால் இங்கே தமிழ் பேசும் ஒருவர் பிரதமராகினால் என்ன? முஸ்லிம் ஒருவர் இங்கே சபாநாயகராகினால் என்ன? இதன்மூலம் இனவாத மனநிலையில் இருந்துவிடுபட்டுள்ளோம் என்று சர்வதேசத்துக்குக் கூற முடியுமாக இருக்கும்.

புரட்சிகரமான இனவாதம் அற்ற போராட்டக்காரர்கள் கேட்ட வரையறுக்கப்பட்ட அமைச்சரவையை அமையுங்கள். இதனைச் செய்து சிறந்த செய்தியை சர்வதேசத்துக்குவே வெளிக்காட்டுங்கள். அதனைத் தொடர்ந்து அனைத்து எம்.பிக்களையும் உள்ளடக்கி துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமையுங்கள் - என்றார்.

## தாய்லாந்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவும் தெரியவந்துள்ளது

இந்நிலையில், பாதுகாப்பு நிமித்தம் தாய்லாந்தில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை குறித்த ஹோட்டலில் இருந்து வெளியேற வேண்டாம் என்று அந்த நாட்டுப் பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

## தமிழ் மக்களின் மனதை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் எம்மைச் சந்திக்க அழைப்பு விடுத்தார். அதில் நாம் பங்குகொண்டோம். அந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். அவருக்கு அந்த விடயங்கள் புதிய விடயங்கள் அல்ல. இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்தார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி கூடிய கவனம் செலுத்த வேண்டும். எமது தமிழ் மக்களின் மனங்களை வெல்லக் கூடிய சில அரசியல் தீர்மானங்களை எடுக்கவேண்டிய கட்டாயம் தற்போதுள்ள அரசுக்கும் ஜனாதிபதிக்கும் ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுக்க வேண்டும்.

உலக வல்லரசு நாடுகளுடைய அதிகாரப் போட்டித்தளமாக இலங்கையின் அமைவிடம் அமைந்துள்ளது. இதனால் உலக வல்லரசுகளின் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

## புலம்பெயர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ் ஆகிய அமைப்புக்கள் மீதான தடையையும் இலங்கை அரசு நீக்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காலிமுகம் காலியானது ஏன்?

இந்த நாட்டின் ஆட்சிப் பீடத்தையே புரட்டிப் போட்ட காலிமுகத்திடல் போராட்டம் நேற்றுடன் முழுமையாக முடிவுக்கு வந்திருக்கிறது.

அங்கிருந்த போராட்டக்காரர்களின் கடைசிக் கொட்டகையும் அகற்றப்பட்டு விட்டது. கடைசி போராளியும் வெளியேறிவிட்டார்.

சுதந்திர இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் காலிமுகத் திடல் போராட்டம் ஒரு வரலாற்றுத் திருப்புமுனை நிகழ்வு.

இலங்கை பல எதிர்ப்பு போராட்டங்களை கண்டிருக்கின்றது. அதுவும் தொழிற்சங்கங்களின் ஆழமான போராட்ட சரித்திரத்தை கண்ட இலங்கைக்கு காலிமுகத்திடல் போராட்டம் ஒன்றும் புதுமை அல்ல.

எனினும் இலங்கையின் சகல வர்க்க மக்களையும் அரசியல், கட்சி, இன, மத, குல வேறுபாடின்றி அதிகார வர்க்கத்துக்கு எதிராக ஒன்று திரள வைத்த இந்தப் போராட்டம் 125 நாள்களுக்குள் இறுதி முடிவுக்கு வந்துவிட்டது. அது முடிவுக்கு வந்த விதம் ஒரு வகையில் துன்பியலானதுதான்.

தன் ஆரம்ப இலக்கில் – கருத்தில் – கணிசமான வெற்றியும் முன்நகர்வும் கண்ட அந்தப் போராட்டத்தினால் அதனை ஒழுங்குமுறையாகத் தொடர்ந்து, முழுமையான நோக்கை அடைய முடியவில்லை என்பதே பிரதான பின்னடைவு.

ராஜபக்ஷக்களின் ஆட்சி அதிகாரத்தை முழுமையாக அடக்கி நீக்க வேண்டும் என்று திரண்ட மக்கள், அத்தோடு இலங்கையின் அரசியல் ஆட்சி முறைமையையும் மாற்றி அமைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் காலிமுகத்திடலில் ஏப்ரல் மாதமளவில் திரளத் தொடங்கினர்.

ராஜபக்ஷக்களின் ஆட்சி அதிகாரத்தை அகற்ற முடிந்ததா என்று கேட்டால் அதில் பாதியளவுதான் வெற்றி. நாட்டின் ஆட்சி அமைப்பு முறைமையை மாற்றி அமைக்கும் எத்தனத்தில் அவர்கள் முன்நகரவே இல்லை என்பதும் உண்மை.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் பதவிகளில் இருந்து ராஜபக்ஷக்கள் இறங்கிவிட்டனர். ஜனாதிபதி ராஜபக்ஷ ஓட்டம் எடுத்து விட்டார். பிரதமர் ராஜபக்ஷ பதவி விலகி விட்டார். அமைச்சுப் பதவிகளில் இருந்தும் ராஜபக்ஷக்கள் விலகி விட்டனர்.

ஆனாலும், ஆட்சிக் கட்டமைப்பும் மாறவில்லை, அதில் ராஜபக்ஷக்களின் பிடியும் அதிகாரமும் செல்வாக்கும் கூடத் தளரவில்லை. இன்னும் வலிமையாகவே தொடர்கின்றன.

ஆட்சிக் கட்டமைப்பு முறைமையையே மாற்ற வேண்டுமென்ற போராட்டக்காரர்களின் அடுத்த இலக்கு எட்டப்பட்டிருந்தால் அதில் ராஜபக்ஷக்களின் அதிகாரப்பிடி என்ற விடயம் தளர்ந்திருக்குமோ என்னவோ! அல்லது இன்னொரு தேர்தல் மூலம் மக்கள் தமது அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்யவும் வாய்ப்புண்டு.

ஆனாலும் மக்களின் இந்த தன்னெழுச்சிப் போராட்டம் இறுதி இலக்கை அடையாமல் தடம் புரண்டு விட்டது என்பது உண்மை. அதற்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று – தத்தமது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க விரும்பிய பிழையான அரசியல் சக்திகள் இந்தப் போராட்டத்திற்குள் ஊடுருவி அதை வழிநடத்த முற்பட்டமை. அதற்குப் போராட்டத் தரப்புகள் இடமளித்தமை.

மற்றது – தமது போராட்டப் பாதையை ஜூலை 9 ஆம் திகதியுடன் ஒழுங்கற்ற வன்முறை வழிக்கு திருப்ப போராட்ட சக்திகள் தாராளமாக சேர்ந்து இடம் அளித்தமை.

புற அரசியல் சக்திகள், கட்சிகள் தங்கள் நோக்கில் – கருத்தில் – ஏத்திவிட்ட கயிற்றை விழுங்கி, அறகலயக்காரர்கள் என்ற பெயரில் முன்வந்தவர்கள் எடுத்த தவறான அணுகுமுறைப் போக்கும் கற்பிதங்களுமே போராட்டத்தின் இந்த முடிவுக்குக் காரணம். அதற்குப் புதிய ஜனாதிபதியை நொந்து பயனில்லை.

# மாநகரசபைக்கு சொந்தமான காணியில் சர்வதேச துடுப்பாட்ட மையம் அமைப்பு!

## சபைக் கூட்டத்தில் ஆலோசனை

மாநகர சபைக்குச் சொந்தமான கோண்டாவிலில் உள்ள நீர் விநியோக கிணறு அமைந்துள்ள காணியில் சர்வதேச துடுப்பாட்ட மையம் அமைப்பது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றபோதே இது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்கு மாகாண இளைஞர்களுக்கே வரப்பிரசாதமாக அமையக் கூடியதாக ஒரு சர்வதேச தரத்திலான துடுப்பாட்ட மைதானம் அமைக்க துடுப்பாட்ட சபை இணக்கம் தெரிவிக்கின்ற போதும் அதற்கு பொருத்தமான நிலம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய ஆராய்ந்தபோது கோண்டாவிலில் உள்ள மாநகர சபைக்கு உரித்தான குடிநீர் வழங்கல் நிலையம் அமைந்துள்ள 11 ஏக்கர் நிலம் பொருத்தமாக அமையலாம் எனக் கருதப்படுகின்றது. எனவே இந்த சபை அதனை அனுமதித்தால் சாத்தியக் கூற்றுகள் தொடர்பில் ஆராயலாம்.

ஏனெனில் மண்டைதீவில் 40 ஏக்கர் வழங்க இணங்கியபோதும் அவர்களால் 100 ஏக்கர் கோரப்பட்டதோடு அந்த மண்ணில் விளையாட்டரங்கு ஏற்படுத்த மண்ணை பதப்படுத்தவே அதிக பணம் செலவு ஏற்படும் என்கின்றனர். இதனால் தீவகத்தில் விளையாட்டரங்கு வருவதற்கு சந்தர்ப்பம் இல்லை. இதேநேரம் இதன் காரணமாக கை நழுவி போகலாம். அதேநேரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எங்கேனும் ஒரு நிலம் கிடைத்து அங்கு இந்த விளையாட்டு அரங்கு மாற்றப்பட்டால் வடக்கில் அதிக துடுப்பாட்ட இளைஞர்களைக்கொண்ட யாழ்ப்பாண மக்களுக்கு நாம் செய்யும் துரோகம் என்றார் முதல்வர்.

இது தொடர்பில் ந.லோகதயாளன் கருத்துரைக்கையில் –

கோண்டாவில் பகுதியில் காணியின் விலை பரப்பு 50 லட்சம் ரூபாவைத் தொட்டு நிற்கும் சூழலில் வளம் மிக்க மண்ணை இவ்வாறான பயன்பாட்டுக்கு மாற்றும்போது அப் பகுதியே வர்த்தக நோக்கம் கொண்டதாக மாறும். அதனை அப்பகுதி மக்கள் விரும்புகின்றனரா என்பதை அறிய வேண்டும். விவசாயத் தன்மை கொண்ட நிலத்தின் தன்மை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இதேநேரம் தீவகப் பகுதியில் இவ்வாறான விளையாட்டரங்கு ஒன்று வருமானால் அப்பகுதி அபிவிருத்தி அடையும் எனக் காத்திருக்கும் மக்களுக்கு நாம் கூறும் பதில் என்ன? வெறுமனே வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டிகளை அமைத்து நகரின் நரகத்தை அகற்றும் பகுதியாக மாற்றாதீர்கள் என ஏற்கனவே அவர்கள் தெரிவித்துள்ளனர். இவை அனைத்திலும் கவனம் செலுத்துவதற்கு அப்பால் இவ்வாறு சர்வதேச விளையாட்டு அரங்கு வந்தபின் அது மத்திய அரசிற்குத்தான் சொந்தம் அல்லது அதனை மாநகர சபையால் பராமரிக்கும் வல்லமை இல்லை என தற்போது கலாசார மண்டபத்துக்குக் கூறுவதுபோன்று கூற மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம். எனவே இந்த விடயத்தில் தீர்மானத்தை இன்றைய கூட்டத்தில் எட்ட முடியாது அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைக்கவேண்டும். – என்றார்.

இலங்கையின் துடுப்பாட்ட சபையில் இனி இல்லை என்ற அளவு இனவாதம் உள்ளது. அதனால் எந்த வகையிலும் யாழ்ப்பாணத்தில் சர்வதேச விளையாட்டு மைதானம் வருவதை விரும்பமாட்டார்கள் அதனை மீறி அமைப்பது நல்ல விடயம். இதேநேரம் எமது ஆட்சிக் காலத்தில் ஒரு மைதானம் அமைக்க முற்பட்ட போது எம்மால் மறுக்கப்பட்டு பராமரிக்கப் பட்டது என உறுப்பினர் இரா.செல்வவடிவேல் தெரிவித்தார்.

இவ்வாறான பல கருத்துக்கள் இருக்கும்போது அது தொடர்பில் ஆராய சிறிது கால அவகாசம் தேவையாகவுள்ளதால் இதனை அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைப்பதே உகந்த விடயம் என உறுப்பினர் மு.றெமீடியஸ் தனது கருத்தில் தெரிவித்தார்.

இவற்றையடுத்து இந்த விடயத்தை அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி வைப்பதாக மாநகர முதல்வர் தெரிவித்தார்.

# திணைக்கள தலைவர்களுக்கான பயணக் கொடுப்பனவு அதிகரிப்பு!

## தொடர்பில் அரசு கவனம் என்கிறார் சுசில்



அனைத்து திணைக்கள அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் பயணக் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

நாடாளுமன்றத்தில் பேசியபோதே அவைத் தலைவர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# பசு மாட்டின் காலை துண்டாடிய விஷமிகள்!

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டு இருந்த பசு மாடொன்றின் கால் ஒன்றை விஷமிகள் துண்டாடியதுடன், மற்றுமொரு காலிலும் காயத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

மூளாய் , முன்கோடை பகுதியைச் சேர்ந்த ஒருவர் தனது வாழ்வாதாரத்துக்காக பசு மாடுகளை வளர்த்து வருகின்றார். அந்நிலையில் வழமை போன்று தனது பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் பசுவை மேய்ச்சலுக்காகக் கட்டியுள்ளார்.

மாடுகளை அவிழ்க்க சென்ற போது பசுவின் கால் ஒன்று துண்டாடப்பட்ட நிலையில் மற்றுமொரு காலில் காயம் ஏற்படும் வகையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் மாடு கிடந்துள்ளது.

அதனை அங்கிருந்து மீட்ட போதிலும் மாடு வலியால் உணவு உட்கொள்ளாது இருக்கின்றது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை கால் நடை வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் மாட்டின் உரிமையாளர் முறைப்பாடு அளித்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரஷ்யா வசமுள்ள உக்ரைன் அணுமின் நிலையம் மீது தாக்குதல் ராணுவமற்ற பகுதியாக அறிவிக்க ஐ.நா. அவை வலியுறுத்தல்



பனிப்போரின் நீட்சியாக அமெரிக்கா ரஷ்யா இடையே நீருபூத்த நெருப்பாக நீடிக்கும் மறைமுக போட்டி எதிரொலியாக உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை தொடங்கி 6 மாதங்களாகிவிட்டன. உக்ரைனின் தென்கிழக்கில் ரஷ்ய படைகள் முன்னேறினாலும் கூட எதிர்பார்த்த வெற்றி இன்னும் கிட்டவில்லை. போரின் தொடக்கத்திலேயே ரஷ்யா வசமாகிவிட்ட ஜபோரிசியா அணுமின் நிலையம் அண்மைக்காலமாக அடுத்தடுத்து தாக்குதலுக்கு இலக்காகி வருவது ஒட்டுமொத்த ஐரோப்பாவையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு அவை அவசரமாக கூடி விவாதிக்கையில் உலகம் எதிர்கொண்டுள்ள பேராபத்தை உணர்ந்து ஜபோரிசியா அணுமின் நிலையத்தை சுற்றிலும் ராணுவமற்ற பகுதியாக அறிவிக்குமாறு சர்வதேச அணுசக்தி முகமை கேட்டுக்கொண்டது. ஜபோரிசியா அணுமின் நிலையம் மற்றும் அதன் அருகே தாக்குதல் நடத்தக் கூடாது என்று உக்ரைனை அறிவுறுத்துமாறு மேற்கு உலக நாடுகளை ரஷ்யா வலியுறுத்தியது.

சர்வதேச அணுசக்தி முகமையின் ஆய்வுக்கு முழுமையாக ஒத்துழைக்கவும் ரஷ்யா உறுதியளித்தது. ஜபோரிசியா அணுமின் நிலையம் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் அதில் உக்ரைனிய ஊழியர்களே தொடர்ந்து பணியில் இருக்கின்றனர். ரஷ்யா வசமாகி விட்ட போதிலும் இதனை மீட்கும் முயற்சியை உக்ரைன் தொடர்கிறது. அணுமின் நிலையத்தை சுற்றிலும் சண்டை நடந்ததால் கடந்த ஜூன் மாதமே அங்கு ஆய்வு நடத்த சர்வதேச அணுசக்தி முகமை முயன்றாலும் இரு தரப்பும் ஒத்துழைப்பு தராததால் அது சாத்தியமாகவில்லை. போர்க்களத்திற்கு நடுவே சிக்கியுள்ள ஜபோரிசியா அணுமின் நிலையம் ஒரு வேலை நேரடித் தாக்குதலுக்கு இலக்கானால்விளையும்பேரழிவுஅளவிடமுடியாததாக இருக்கும். செர்னோபிளை போன்றதொரு பேரழிவு மீண்டும் நேரிடக் கூடாது என்று ஐரோப்பா மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகமும் அஞ்சுகிறது.

## மெக்சிக்கோ எல்லையில் வன்முறை; 11 பேர் உயிரிழப்பு



மெக்சிக்கோ எல்லைப்பகுதியில் உள்ள சியூதத் ஜுவாரஸ் நகரில் உள்ள சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரு குழுவினரிடையே மோதல் ஏற்பட்டது. இதில் 2 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர். இந்த தகவல் வெளியில் பரவியதையடுத்து, நகர வீதிகளில் இரு குழுவினரிடையே கலவரம் மூண்டது. ஒருவரையொருவர் கடுமையாக தாக்கிக்கொண்டனர். பொதுமக்களும் தாக்கப்பட்டனர். வணிக நிறுவனங்களுக்கு தீவைக்கப்பட்டன. இந்த வன்முறையில், வானொலி நிலையத்தின் 4 ஊழியர்கள் உள்ளிட்ட 9 பேர் கொல்லப்பட்டனர். இந்த வன்முறையானது, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஜுவாரசில் நடந்த பயங்கர கலவர காலத்தை நினைவுபடுத்தும் வகையில் இருந்தது. மெக்சிக்கோவில் ஆதிக்கம் செலுத்தி வரும் போதைப்பொருள் விற்பனையாளர்கள், தொழிலை பாதுகாக்கவும், தங்களுக்கு போட்டியாக உள்ளவர்கள் மற்றும் எதிரிகளை பழிவாங்கவும், உள்ளூரில் செயல்படும் குழுக்களை பயன்படுத்துகின்றனர். இதனால் தொடர்ந்து வன்முறைகள் ஏற்படுகின்றன



## நான்கு மடங்கு வேகமாக வெப்பமடையும் ஆர்டிக் பகுதி



இங்கிலாந்து நாட்டை சேர்ந்த பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த புவியல் பேராசிரியர் ஜோனாத்தன் பேம்பர் என்பவர் ஆட்டிக் பகுதி குறித்து ஆராய்ச்சி நடத்தி உள்ளார். இந்த புதிய ஆய்வில் கடந்த 43 ஆண்டுகளில் உலகின் மற்ற பகுதிகளை விட ஆட்டிக் பகுதி, 4 மடங்கு வேகமாக வெப்பமடைந்து வருவதாக தெரிய வந்துள்ளது. கடந்த 1980ம் ஆண்டு இருந்ததை விட, ஆட்டிக்கில் சராசரியாக 3 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகமாகி இருக்கிறது.

ஆட்டிக் கடல் பனி அடுக்குகள் உலகின் வெப்பநிலையை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த பனி அடுக்குகள் 85 சதவீத சூரிய ஒளியை எதிரொலிக்கின்றன. இதனால், சூரிய ஒளி புவியை வெப்பமாக்காமல் திருப்பி அனுப்பப்படுகிறது. இதன்மூலம், பூமி வெப்பமயமாவது தடுக்கப்படுகிறது. ஆனால், கடல் பனி அடுக்குகள் உருகும்போது, சூரிய ஒளி நேரடியாக விழுவதால் நிலப்பரப்புகள், கடல்களை அதிகம் வெப்பமடையச் செய்கின்றன.

### சூடானில் ராணுவ ஆட்சிக்கு எதிராக

## ராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையே வெடித்தது வன்முறை



வடக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் ராணுவத்திற்கு எதிராக பொதுமக்கள் நடத்தி வரும் வாராந்திர போராட்டத்தில் வன்முறை வெடித்தது. ராணுவம் மற்றும் பொலிஸார் நடத்திய தாக்குதலில் பலர் காயமடைந்தனர். சூடானின் தலைநகரமான கார்தூமில் குவிந்த இளைஞர்கள், ராணுவ வாகனங்களை சூழ்ந்துகொண்டு கற்களை வீசி தாக்குதல் தொடுத்தனர். பதிலுக்கு ராணுவத்தினரும் போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இதனால் இரு தரப்புக்கும் இடையே பெரும் மோதல் வெடித்தது. ஜனநாயக ஆட்சி நடந்து வந்த சூடானில் 1989ம் ஆண்டு முதல் உமர் அல்பஷீர் அதிபராக பதவி வகித்து வந்தார். கடந்த 2019ம் ஆண்டு ராணுவ புரட்சி ஏற்பட்டு உமர் அல்பஷீர் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார்.

இடைக்கால பிரதமராக அப்துல்லா ஹம்தோக் நியமிக்கப்பட்டாலும் ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலால் அவரும் கைது செய்யப்பட்டார். பின்னர் 2021ம் ஆண்டு அதிகாரத்தை கையில் எடுத்த சூடான் ராணுவம் நாடு முழுவதும் அவசர நிலையை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிறப்பித்தது. இதனை கடுமையாக எதிர்த்த சூடான் மக்கள் ஆட்சி அதிகாரத்தை சிவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி கடந்த 10 மாதங்களாக போராடி வருகின்றனர். வாரம் ஒருமுறை நடைபெற்று வரக்கூடிய போராட்டத்தில் தற்போது வன்முறை வெடித்துள்ளது.

# வைரஸை போல தென் கொரியாவையும் ஒழித்துக் கட்டுவோம் கொரோனாவில் இருந்து மீண்ட வட கொரியா எச்சரிக்கை!

தங்கள் நாட்டில் திட்டமிட்டே தென் கொரியா கொரோனாவை பரப்பி விட்டதாக வடகொரியா அதிபரின் சகோதரி கிம் யோ ஜங் குற்றம் சாட்டியுள்ளார். இந்த நிலை தொடர்ந்தால் வடகொரியாவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். வடகொரியாவில் கொரோனா பாதிப்பு ஏதும் இல்லை என அந்நாட்டு அரசு அறிவித்தது. அதிபரின் சகோதரியும் அந்நாட்டின் அதிகாரம் மிக்க நபருமான கிம் யோ ஜங் தங்கள் நாட்டில் கொரோனா பரவ அண்டை நாடான தென்கொரியாதான் காரணம் என குற்றம்சாட்டியுள்ளார்.

தென் கொரியாவில் இருந்து அனுப்பப்படும் பலூன் போன்ற பொருள்களின் மூலம் தங்கள் எல்லைக்குள் கொரோனா பரவியதாக தெரிவித்த கிம் யோ ஜங் தொடர்ந்து பலூன்களை அனுப்பினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். கொரோனா வைரஸை ஒழித்துக் கட்டியது போல தென்கொரியா அதிகாரிகளையும் கையாள்வோம் என அவர் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார். கொரோனா பாதிப்பால் தனது சகோதரரும் அதிபருமான கிங் ஜான் உன் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார் என அவர் தெரிவித்தார். வடகொரியாவில் போதுமான மருத்துவ வசதிகள் இல்லாததால் கொரோனாவை எதிர்கொள்வதில் அந்நாடு பின்தங்கி இருப்பதாக மருத்துவ உலகம் குற்றம் சாட்டியிருந்த நிலையில் அந்நாடு தற்போது அண்டை நாடு மீது பழி போட்டுள்ளது.

# சுதந்திர தின விழாவையொட்டி டெல்லியில் உச்சகட்ட பாதுகாப்பு




இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், இந்த ஆண்டு சுதந்திர தின விழாவை சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தலைநகர் டெல்லியில் வருகிற 15 ஆம் திகதி நடைபெறவுள்ள விழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தேசிய கொடி ஏற்றி வைத்து உரையாற்றவிருக்கிறார். இந்த விழாவையொட்டி டெல்லி நகரில் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாத தொடக்கத்தில் இருந்தே விழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சோதனைகள் மும்முரமாக நடந்துவருகின்றன. செங்கோட்டை மற்றும் விழா நடைபெறும் பகுதியில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுதந்திர தின விழாவை சீர்குலைக்க சதிச் செயல்களில் ஈடுபடலாம் என்ற அச்சுறுத்தல் நிலவுவதால் டெல்லி மாநகர் முழுவதும் கண்காணிப்பு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பல்வேறு மாநிலங்களில் இருந்தும் டெல்லி நகருக்குள் நுழையும் வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனை செய்த பிறகே அனுமதிக்கப்படுகின்றன. டெல்லியில் உள்பகுதிகளிலும் தடுப்புகள் அமைத்து தீவிர வாகனச் சோதனையிலும் காவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

முக்கிய வீதிகளில் உயர்ரக கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. 24 மணி நேரமும் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சுதந்திர தினம் முடியும் வரை பட்டங்கள் பறக்க விடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தையொட்டி இந்திய எல்லைப் பகுதியும் உஷார்படுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் இருந்து அவ்வப்போது ட்ரோன்கள் அத்துமீறி இந்திய எல்லைக்குள் பறந்துவருவதால், அப்படியேதேனும் பறந்தால் அவற்றினை சுட்டு வீழ்த்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எல்லையில் ராணுவ வீரர்களுடன் உள்ளூர் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

## 100 கோடி ரூபா மதிப்பிலான போதைப்பொருள் சென்னை விமான நிலையத்தில் பறிமுதல்




போதைப்பொருள் கடத்தல் நடைபெறுவதாக சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்த நிலையில், சோதனைகள் கடுமையாக்கப்பட்டிருந்தன.

எத்தியோப்பியாவில் இருந்து சென்னைக்கு வந்த இக்பால் பாஷா என்ற பயணியிடம் விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் சோதனையிட்டபோது, அந்த நபரிடமிருந்து 100 கோடி ரூபா மதிப்பிலான 9 கிலோ 590 கிராம் எடையுள்ள கோகேன் போதைப்பொருள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதை அதிகாரிகள் பறிமுதல் செய்ததோடு குறித்த நபரையும் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணை நடைபெற்று வருவதாக சென்னை சர்வதேச விமான நிலைய சுங்கத்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

## ‘தண்டோரா’ போடும் நடைமுறைக்கு தடை அரசாணை வெளியிட்டது தமிழக அரசு





தண்டோரா போடும் நடைமுறைக்கு தடை விதித்து தமிழக அரசு அரசாணை வெளியிட் டுள்ளது. இது தொடர்பாக அரசு தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, வெளியிட்டுள்ள உத்தரவில், சட்டம் மற்றும் ஒழுங்கு, இயற்கை இடர்பாடுகள் மற்றும் இன்ன பிற அரசின் முக்கிய செய்திகளை பொது மக்களிடம் விரைவாக கொண்டு சேர்க்கும் பொருட்டு, விளம்பரம் செய்யும் விதமாக ‘தண்டோரா’ போடும் முறை காலம் காலமாக நடைமுறையில் இருந்த பழக்கம். அது இன்று வரை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்ட இக்காலத்தில், தமுக்கடிப்பினால் தண்டோரா போட்டு அரசின் முக்கிய செய்திகளை விளம்பரம் செய்தல் தொடர்பாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டி மாற்று ஏற்பாடுகளை செய்யும் வண்ணம் அரசின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

தமுக்கடிப்பினால் தண்டோரா போட்டு அரசின் முக்கிய செய்திகளை விளம்பரம் செய்வதை அரசு கூர்ந்தாய்வு செய்து, தமுக்கடிப்பினால் ‘தண்டோரா’ போடும் நடைமுறை எந்தெந்த துறைகளில் நடைமுறையில் உள்ளதோ, அதற்கு முழுமையாக தடை விதித்தும் இது தொடர்பான அரசின் ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அனைத்தையும் மாற்றியமைக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இதற்கு மாற்று ஏற்பாடாக, அரசின் முக்கிய செய்திகளை மிக விரைவாக மக்களிடம் சேர்க்கும் விதத்தில், பொருத்தமான வாகனங்களில் ஒலி பெருக்கிகளை பொருத்தி, தமிழ்நாட்டின் கிராமப் புறங்களின் மூலை முடுக்குகளிலெல்லாம் விளம்பரம் செய்வதை நடைமுறைப்படுத்தலாம். தண்டோரா போடும் பணியில் ஏதேனும் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தால், அவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்து கொடுப்பதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தண்டோரா போடுவதற்கு விதிக்கப்பட்ட தடையை மீறி ஈடுபடுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும், இதனை ஊராட்சி அமைப்புகள் வரை ஊடுருவும் அளவுக்கு பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





## பத்திரப்பதிவு சட்ட திருத்த மசோதா குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிப்பு

தமிழகத்தில் சார்பதிவாளர் அலுவலகங்கள் மூலம் வீடு, விளை நிலம் உள்ளிட்ட சொத்து பரிமாற்றங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு பதிவு செய்யப்படும் ஆவணங்களில் ஒரு சில நேரங்களில் போலியான ஆவணங்களை காட்டி பத்திரப்பதிவு செய்யப்படுகிறது. இதில், சார்பதிவாளர்கள் கூட்டு சேர்ந்து மோசடியில் ஈடுபடுகின்றனர் எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு பதிவு செய்யப்படும் நிலங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் நீதிமன்றம் செல்கின்றனர்.

இந்த மாதிரியான வழக்குகள் ஏராளமானவை நிலுவையில் உள்ளன. இதனால், வழக்கை முடிக்க பல மாதங்கள் ஆகும் என்பதால், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு உரிய தீர்வு கிடைப்பதில் காலதாமதமவதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பிரச்சினைக்கு முடிவு கட்டும் வகையில், தமிழக சட்டப்பேரவையில் பத்திரப்பதிவு திருத்த சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து மத்திய அரசின் பல்வேறு துறைகளின் ஒப்புதல்களும் பெறப்பட்டன. இதனைத் தொடர்ந்து அந்த மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், மோசடியாக பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களை ரத்துச் செய்ய பதிவுத்துறைக்கு அதிகாரம் அளிக்கும் சட்ட திருத்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார் என தமிழக வணிக வரித் துறை அமைச்சர் மூர்த்தி தெரிவித்துள்ளார்.

நில அபகரிப்பாளர்களிடமிருந்து மீட்டு சொத்துக்களை உரியவர்களுக்கு பெற்றுத் தரும் வரலாற்று சிறப்புமிக்க இச்சட்ட திருத்தத்தைக் கொண்டு வர வழிகாட்டிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.




## இலவச மின்சார வாக்குறுதியை நிறைவேற்றாதது ஏன்? அரவிந்த் கெஜ்ரிவாலிடம் மத்திய அமைச்சர் கேள்வி

இலவசங்களை வாக்குறுதிகளாக அளித்து வாக்குகள் கோரப்படுவது நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் ஆபத்தானது என இந்தியப் பிரதமர் மோடி சமீபத்தில் தெரிவித்திருந்ததையடுத்து, பா.ஜ.க. தலைவர்கள் கெஜ்ரிவாலின் இலவச அறிவிப்புகளை கடுமையாகச் சாடி வருகின்றனர். அதற்குப் பதிலடியாக, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு பணக்காரர்களுக்கு வரிகளைத் தள்ளுபடி செய்து ஏழை மக்கள் மீது வரிகளைச் சுமத்துவதாக அரவிந்த் கெஜ்ரிவால் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி, அரவிந்த் கெஜ்ரிவால் ஒரு பொய்யர். பல மாநிலங்களில் இலவச மின்சாரம் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்துள்ளார். டெல்லியில் அதனை நிறைவேற்றினாரா? என கேள்வி எழுப்பியுள்ளார். டெல்லியில் உள்ள அரசுப் பாடசாலைகள் சிறப்பாக செயல்படுகின்றன என்றால், ஆம்ஆத்மி எம்.எல்.ஏக்கள் தங்கள் குழந்தைகளை அங்கு சேர்க்காதது ஏன்? என்றும் அவர் கேட்டுள்ளார்.

# தொற்றா நோய்த் தடுப்புக்கான மத்திய நிலையம் சாய்ந்தமருதில்





(நூருள் ஹுதா உமர்)

கல்முனை சுகாதார பிராந்திய தொற்றா நோய்த்தடுப்புக்கான கேந்திர நிலையம் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ. வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம். மாஹிர் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்களும் சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாக சாய்ந்தமருது பிரதேச வைத்திய அதிகாரி எம்.எச்.கே. சனூஸினால் இந்நிலையத்தின் பணிகள் கடந்த இரண்டு மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட இந்நிலையத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன. இதற்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன எனவும் நிகழ்வில் கலந்து கொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கண் பரிசோதனைக்கான உபகரணங்களும் குளிரூட்டியும் ஒலிக்கருவிகளும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# உகந்தை மலை முருகன் தீர்த்தோற்சவம்நிறைவு



கிழக்கிலங்கையில் பிரசித்திபெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் ஆலயத்தின் எதிரேயுள்ள கடற்கரையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாள்கள் நடைபெற்ற ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் தம்ப பூசை, வசந்த மண்டப பூசை மற்றும் சுவாமி உள் வீதி, வெளி வீதியுலா என்பன இடம்பெற்றன.

தீர்த்தோற்சவ தினமான வியாழன்று பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்களின் தலைமையில் விநாயகர் வழிபாடுகளுடன் கிரியைகள் ஆரம்பமாகி விசேட அபிஷேகம் பூஜைகளுடன் பிரதான கும்பங்கள் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு முருகனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டன.

தொடர்ந்து, திருப்பொற்ச்சுண்ணம் இடித்தல், பூஜை ஆராதனைகள், தேவார பாராயணங்கள் பாடி, மங்கல வாத்தியங்களுடன் ஆலயம் வலம் வந்து தீர்த்தக்கரையினை அடைந்தார்.

கடற்கரையில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியார்கள் புடைசூழ வேதங்கள் ஓத, நாதஸ்வர மேளங்களுடன் அடியார்களின் அரோகரா கோஷங்களுடன் முருகனுக்கு தீர்த்தோற்சவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

# கடலில் அடித்துச் செல்லப்பட்ட இரு யுவதிகள் பத்திரமாக மீட்பு



நிலாவெளி கடற்கரையில் நீராடச் சென்ற வேளை கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு யுவதிகள், பொலிஸ் உயிர்காப்புப் பிரிவு மற்றும் கடற்படையின் கரையோரப் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தோரால் மீட்கப்பட்டனர்.

குடும்பத்தாரோடுசுற்றுலாவந்த–அனுராதபுரம்சியம்பலகஹாகம பிரதேசத்தைச் சேர்ந்த – இந்த யுவதிகளே கடலில் நீராடும் போது அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சுமார் 150 மீற்றர் தூரம் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட இவர்கள் இருவரையும் பொலிஸாரும் கடற்படையின் கரையோரப் பாதுகாப்பு பிரிவினரும் கரைக்குக் கொண்டு வந்து முதலுதவி அளித்து குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

# மட்டு. சிறையில் வியாழனன்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மீண்டும் கொரோனா தொற்று பரவிவரும் நிலையில் சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பல்வேறு கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பணிமனை ஊடாக பல்வேறு கொரோனாத் தடுப்பு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் முதற்கட்டமாக அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு முதற்கட்டமாக நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் ஆர்.மோகன்ராஜின் வழிகாட்டல்களுக்கு அமைவாக மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கடமையாற்றும் 136 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும், 555 சிறைக் கைதிகளுக்கும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மட்டக்களப்பு மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் இளையதம்பி உதயகுமார் தலைமையிலான சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்தனர்.

# இறக்குமதியாகும் பொருள்களுக்கு மேலும் கட்டுப்பாடுகளை விதிக்குக!

## மத்தியவங்கி நிதி அமைச்சுக்கு அறிவிப்பு

எதிர்வரும் காலங்களில் அந்நிய செலாவணி நெருக்கடி மோசமடையக்கூடும் என்பதால் அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியை மேலும் கட்டுப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கி நிதியமைச்சிற்கு அறிவித்துள்ளது.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு மீதான தாக்கம் எதிர்காலத்தில் தொடர்ந்து அழுத்தத்திற்கு உள்ளாகும் என்பதால், இறக்குமதி கட்டுப்பாடு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு டொலர்கள் தேவைப்படுவதால், அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியைக் கடுமையாகக் கட்டுப்படுத்துமாறு மத்திய வங்கி அறிவித்துள்ளது. இதன்படி, இறக்குமதி மட்டுப்படுத்தப்பட வேண்டிய அத்தியாவசியமற்ற பொருள்களின் மூன்று பட்டியல்களையும் மத்திய வங்கி அனுப்பியுள்ளதுடன், இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட அத்தியாவசியமற்ற பொருள்கள் இதில் உள்ளடங்குகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திறந்த கணக்கு முறையின் கீழ் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் பொருள்களை விற்பனை செய்த பின்னர் பணமாக செலுத்துவதற்கும் தற்காலிகமாகத் தடை விதிக்குமாறும் மத்திய வங்கி நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

# உதயங்கவீரதுங்க வெளிநாடு செல்ல முன்வைத்த கோரிக்கை நிராகரிப்பு



ரஷ்யாவுக்கானமுன்னாள்இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க, வெளிநாடு செல்ல முன்வைத்த கோரிக்கையை கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க சர்ச்சைக்குரிய மிக் விமான ஊழலில் சந்தேகநபர்களில் ஒருவராகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளார்.

இந்நிலையில் வெளிநாட்டில் நடைபெறவுள்ள கருத்தரங்கொன்றில் கலந்து கொள்ள அனுமதி வழங்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நகர்வு மனுவொன்றின் மூலம் உதயங்க வீரதுங்க வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எனினும் வழக்கு தொடர்பான ஆவணங்கள் முழுமையாக இல்லை என்ற காரணத்தைக் காட்டி உதயங்க வீரதுங்க இதுவரை முழுமையான வாக்குமூலம் வழங்கவில்லை என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்தது.

அதன் காரணமாக அவர் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்பட்டால் வழக்கு விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படலாம் என்று பொலிஸார் தெரிவித்த கருத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், உதயங்க வீரதுங்கவின் வெளிநாடு செல்வதற்காக முன்வைத்த கோரிக்கையை நிராகரித்துள்ளது. அத்துடன் இந்த விசாரணைகளுக்கு முழுமையான வாக்குமூலம் ஒன்றை வழங்க எதிர்வரும் 17 ஆம் திகதி சி.ஐ. டியில் முன்னிலையாக வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# அனுமதிப்பத்திரமின்றி பனைமரங்களை ஏற்றிய 6 பேர் கடற்படையால் கைது!

அனுமதிப்பத்திரமின்றி கப்ரக வாகனத்தில் பனைமரங்களை ஏற்றி வந்த 6 பேரை இன்று அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர். காரைநகர், அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

வாகன சாரதி மாத்திரம் வாகனத்தில் வந்த நிலையில் ஏனையோர் மோட்டார் சைக்கிள்களில் வந்துள்ளனர்.

எனவே வாகன சாரதி அனுமதிப்பத்திரமின்றி மரங்களைக் கடத்திய குற்றச்சாட்டின் கீழும், ஏனைய ஐவரும் சந்தேகத்தின் பேரிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் மற்றும் பனைமரங்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் போராட்டத்தை ஊடகவியலாளர் எனக் காட்டி திசைதிருப்ப முயற்சி!



ஊடகவியலாளர் என அடையாளம் காட்டி, உள்நாட்டு விசாரணையை வலியுறுத்த கோரியோர் விரட்டியடிக்கப்பட்டனர். கிளிநொச்சியில் நேற்று (வெள்ளிக்கிழமை) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தில் இவ்வாறு இடம்பெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் போராட்டம் ஆரம்பமாகவிருந்த இடத்தில் இவ்வாறு தம்மை ஊடகவியலாளர்கள் என அடையாளம் காட்டி, போராட்டத்தைத் திசைதிருப்ப முற்பட்டவர்களே இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் விரட்டியனுப்பப்பட்டனர்.

தாம் ஊடகவியலாளர்கள் எனவும், இன்றைய(நேற்றைய) போராட்டத்தில் சர்வதேச விசாரணை வேண்டாம், உள்நாட்டு விசாரணை போதும் என கூறி குரல்பதிவு மேற்கொள்ள முயற்சித்தவர்களே இவ்வாறு விரட்டியடிக்கப்பட்டனர்.

அவர்கள், ஒரு நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் எனும் நிறுவன அடையாள அட்டையை காண்பித்து போராட்டத்தை திசைதிருப்ப முயற்சித்தவர்களே இவ்வாறு விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மேற்படி இருவரும் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களுடனும் முரண்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# கால்மேசைப்பந்து விளையாட்டு ஓட்டமாவடியில் அறிமுகம் நிகழ்வு






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கையின் 71ஆவது விளையாட்டாக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கால்மேசைப்பந்து (Teqball) விளையாட்டை மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிமுகம் செய்யும் நிகழ்வும், சர்வதேச சம்மேளனத்தினால் இணைய வழியில் இடம்பெற்ற Level C கால்மேசைப்பந்து விளையாட்டின் நடுவர் பரீட்சையில் சித்தியடைந்த நடுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அஸ்பக் (ASSPEK ) அகாடமி ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை மாலை 3:30 மணியளவில் ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்ட தேசிய சம்மேளனத்தின்ஒருங்கிணைப்பாளரும்அஸ்பக்அகாடமியின் பணிப்பாளருமானஏ.எல்.எம்.இர்பானின்தலைமையில் இடம்பெற்றநிகழ்வில்பிரதமஅதிதியாககோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். நௌபர் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன், சிறப்பதிதியாக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம்.ராசிக்கும், ஏனைய அதிதிகளாக அஸ்பக் விளையாட்டுக்கழகத் தலைவர் ஏ.எல்.எம்.இர்ஷாத், முன்னாள் விளையாட்டு உத்தியோகத்தர் பீ.வீ.பிஸ்தாமி ரவூப், கிராம சேவை உத்தியோகத்தர்களான எம்.எம்.சாதாத், எம்.சஜி, மனிதம் அமைப்பின் செயலாளர் எம்.ஷாஜகான், ஏ.எல்.எம்.லியாப்தீன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின் போது கால்மேசை அறிமுகம், கால்மேசைப்பந்து விளையாட்டு நடுவர்கள் சீருடை அறிமுகம் என்பன இடம்பெற்றமையோடு, நடுவர் பரீட்சையில் சித்தியடைந்த 35 நடுவர்களுக்கான அடையாள அட்டை, சான்றிதழ்கள் மற்றும் சீருடைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2022இல் வெளியிடப்பெற்றது.